# Indian Polity Notes Part 15 in Tamil

## 15] பட்டியல் மற்றும் பழங்குடி பரப்பிடங்கள்

பகுதி – X (சரத்துக்கள்: 244 – 244 A)

பட்டியல் மற்றும் பழங்குடியினரின் பரப்பிடங்களை நிர்வகித்தல்

**சரத்து – 244**

- அஸ்ஸாம், மேகாலாயா, திரிபுரா, மிஸோராம் (AMTM) மாநிலங்களைத் தவிர, பிற மாநிலங்களில் வாழும் பட்டியல் மற்றும் பழங்குடியினரின் பரப்பிடங்களை நிர்வகிக்கவும், கட்டுப்படுத்தவும் அரசியலமைப்பின் 5 – வது அட்டவணையில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் பொருந்தும்.
- அஸ்ஸாம், மேகாலாயா, திரிபுரா, மிஸோரம் ஆகிய மாநிலங்களில் வாழும் பழங்குடிகள் பரப்பிடங்களுக்கு ஆறாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் பொருந்தும்.

**சரத்து - 244 A**

- அஸ்ஸாமில் உள்ள சில பழங்குடியினர் பரப்பிடங்களை உள்ளடக்கி ஒரு தனி மாநிலத்தை உருவாக்கவும், சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை போன்றவற்றை உருவாக்கவும், சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை போன்றவற்றை உருவாக்கவும் நாடாளுமன்நத்திற்கு அதிகாரம் உண்டு.
- இந்திய அரசியலமைப்பின் 1969 – ம் ஆண்டு 22 – வது திருத்தத்தின் படி சரத்து - 244 A சேர்க்கப்பட்டது.
- தன்னாட்சி மாநிலத்திற்கு,தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பகுதி நியமனம், பகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு சட்டமன்றமாக செயல்பட உருவாக்கலாம்.
    - ✓ அமைச்சரவை உருவாக்கலாம்.
    - ✓ அதற்குரிய அமைப்பு, அதிகாரங்கள்,பணிகள் தொடர்பாக சட்டம் இயற்றலாம்.
- மாநிலப் பட்டியல் அல்லது பொதுப் பட்டியலில் உள்ள துறைகளில் தன்னாட்சி மாநிலம் சட்டம் இயற்றும் அதிகாரம்.
- தன்னாட்சி மாநிலத்தின் நிர்வாக அதகார நீட்சி.
- அஸ்ஸாம் மாநிலத்தால் விதிக்கக்கூடிய வரிகளை தன்னாட்சி மாநில ஒதுக்குதல்.
- இது தொடர்பான அனைத்து விடயங்கள்.
- இந்த திருத்தம், நாடாளுமன்றத்தின் அவைகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறைவில்லாத உறுப்பினர்கள் வாக்களிக்க நிறைவேற்ற வேண்டும்.